இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 22 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 16 – திங்கள்கிழமை 01 செப்டம்பர் 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 22: Thiruvalluvar Year - 2056 - Aavani 16 - Monday 01 September 2025 - Chennai 16 Pages ₹ 5.00







தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க ஐரோப்பிய நாடுகளுக்கானப் பயணத்தை மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று ஜெர்மனி வந்தடைந்தார்.முதலமைச்சர் அவர்கள் டசெல்டோர்ஃப் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தபோது, வட ரைன்வெஸ்ட்பாலியா (NRW) மாகாணத்தின் முதலமைச்சர் ஹென்ட்ரிக் வூஸ்ட் சார்பாக, அவருடைய அரசின் தூதரக விவகாரங்கள் மற்றும் அரசுமுறை வரவேற்புப் பிரிவின் திருமதி. அன்யா டி வூஸ்ட், பெர்லினில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பொறுப்பாளர் அபிஷேக் துபே மற்றும் ஃபிராங்க்பர்ட்டில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் பொறுப்புத் துணைத் தூதர் விபா காந்த் ஷர்மா ஆகியோர் அவரை அன்புடன் வரவேற்றனர். மேலும் விமான நிலையத்தில் நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெருமக்கள் குழந்தைகள், சமூக தலைவர்கள் மற்றும் குடும்பத்தினர் பூங்கொத்துக்களை வழங்கியும் வாழ்த்து முழக்கங்களை அடங்கிய பதாகைகளை ஏந்தியும் அன்புடன் வரவேற்றனர். உடன் திருமதி துர்கா ஸ்டாலின், அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளனர்.

## விமான நிலையத்தில் உற்சாக வரவேற்பு!

# ஜெர்மனியில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## அயலகத் தமிழர்கள், குழந்தைகள் மலர்க் கொத்து வழங்கி சிறப்பித்தனர்!

**டசெல்டோர்ஃப், செப்.1 -**

**தமிழ்நாட்டிற்கு தொழில் முதலீடுகளை ஈர்க்க ஐரோப்பிய நாடுகளுக்கானப் பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜெர்மனி வந்தடைந்தார். விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தூதரக அதிகாரிகள், தமிழ்ப் பெருமக்கள் மலர்க் கொத்து வழங்கி உற்சாகமாக வரவேற்றனர்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டுக்கு புதிய முதலீடுகளை ஈர்ப்பதையும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களுடன் தொடர்புகொள்வதையும் நோக்கமாகக் கொண்ட 8 நாள் ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கான ஐரோப்பிய பயணத்தை நேற்று தொடங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் டசெல்டோர்ஃப் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தபோது, வட ரைன் வெஸ்ட்பாலியா (NRW) மாகாணத்தின் முதலமைச்சர் ஹென்ட்ரிக் வூஸ்ட் சார்பாக, அவருடைய அரசின் தூதரக விவகாரங்கள் மற்றும் அரசுமுறை வரவேற்புப் பிரிவின் திருமதி. அன்யா டி வூஸ்ட், பெர்லினில் உள்ள இந்தியத் தூதரகத்தின் பொறுப்பாளர் அபிஷேக் துபே மற்றும் ஃபிராங்க்பர்ட்டில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தின் பொறுப்புத் துணைத் தூதர் விபா காந்த் ஷர்மா ஆகியோர் அவரை அன்புடன் வரவேற்றனர்.

டசெல்டோர்ஃப் விமான நிலையத்திற்கு அவர் வந்தடைந்தவுடன், நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள், குழந்தைகள், சமூகத் தலைவர்கள் மற்றும் குடும்பத்தினர் மலர்கள் மற்றும் பதாகைகளை ஏந்தி முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இந்த வரவேற்பு, தமிழ்நாட்டின் உலகளாவிய கலாச்சாரப் பெருமையையும், ஓர் அரசியல் தலைவராக முதலமைச்சர் அவர்களின் சர்வதேச மதிப்பையும் பறைசாற்றியது.

### ஜெர்மனியில் தமிழர்களின் குடும்பத்தினருடன்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு!

### ‘பாசத்தை கண்டு நெகிழ்ச்சி!’

**டசெல்டோர்ஃப், செப். 1-**

**தமிழகத்திற்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு ஒரு வார பயணமாக, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னையில் இருந்து புறப்பட்டு சென்றார். நேற்று (ஆகஸ்ட் 31) ஜெர்மனிக்கு சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இது தொடர்பாக தமிழர்கள் வரவேற்ற புகைப்படத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளார்.**

**இதுகுறித்து அவர் எக்ஸ் தளப்பதிவில் தெரிவித்திருப்பதாவது; “ஜெர்மனியின் டியோட்ஸ்லாந்த் நகரில் தமிழர்களின் குடும்பத்தினரை சந்தித்தேன். தமிழ் மக்களின் பாசத்தைக் கண்டு நெகிழ்ச்சி அடைந்தேன்.**



**தமிழகத்தின் சாதகமான அம்சங்களை எடுத்துக் கூறி முதலீடுகளை ஈர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்குவேன்”.**

**இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

### தமிழ்நாட்டின் ஒளிமயமான எதிர்காலத்திற்கான

## முதலீடுகளை ஈர்க்க பெருமையுடன் முன்செல்கிறேன்!

### ஜெர்மனி பயணம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

டசெல்டோர்ஃப், செப். 1-

தமிழ்நாட்டின் ஒளிமயமான எதிர் காலத்திற்கான முதலீடுகளை ஈர்க்க பெருமையுடன் முன் செல்கிறேன் என்று ஜெர்மனி சென்றவுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாட்டிற்கு புதிய தொழில் முதலீடுகளை ஈர்த்திட அரசு முறைப் பயணமாக ஜெர்மனி நாட்டிற்கு சென்றடைந்தது குறித்தும், அங்குள்ள தமிழ்க் குடும்பங்கள் அளித்த வரவேற்பு குறித்தும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் நேற்று வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**வணக்கம் ஜெர்மனி!**

**இங்கே உள்ள எனது தமிழ்க் குடும்பத்தினரின் பாசத்தால் தழுவப்பட்டு, தமிழ்நாட்டின் வலிமையை வெளிப்படுத்தவும், முதலீடுகளை ஈர்க்கவும், ஒளிமயமான எதிர்காலத்திற்கான கூட்டாண்மைகளை உருவாக்கவும் நான் பெருமையுடன் முன்செல்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது சமக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

ஜெர்மனியில் அவரது பயணத்திட்டத்தின் ஒரு பகுதியாக, வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று முதலமைச்சர் அவர்கள், நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கலந்துகொள்ளும் மாபெரும் அயலக தமிழர்கள் நிகழ்ச்சியில் தலைமை ஏற்க உள்ளார். இந்நிகழ்ச்சியில் ஐரோப்பா முழு வதும் உள்ள தமிழ்ச் சங்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ் பண்பாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

மேலும், தமிழ் அடையாளத்தைப் பாதுகாப்பதற்கும், தமிழ்நாட்டின் சிறப்பினை வெளிநாட்டுகளில் மேம்படுத்துவதற்கும் பங்களித்த ஐரோப்பாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பல தமிழ்ச் சங்கங்களை அவர் கௌரவிக்கவுள்ளார்.

இன்று (திங்கட்கிழமை) முதலமைச்சர் அவர்கள் டசெல்டோர்ஃபில் உயர் நிலை முதலீட்டாளர் மாநாட்டிற்கு தலைமை ஏற்று, உலகளாவிய முதலீட்டாளர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களுடன் நேரடியாக கலந்துரையாடுவார். இந்த நிகழ்வின் போது முக்கிய முதலீட்டு அறிவிப்புகள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தமிழ்நாட்டில் முதலீடு செய்யவும், தங்கள் தொழில் திட்டங்களை விரிவுபடுத்தவும் விரும்பும் முக்கிய முதலீட்டாளர்களை முதலமைச்சர் அவர்கள் தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்.

இந்தியாவின் மிகவும் தொழில்மயமான மாநிலமான தமிழ்நாட்டிற்கும், ஜெர்மனியின் மிகவும் தொழில்மயமான மாகாணமான வட ரைன் வெஸ்ட்பாலியாவுக்கும் இடையிலான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதன் ஒரு பகுதியாக, வட ரைன்வெஸ்ட்பாலியா மாகாண முதலமைச்சர் ஹென்ட்ரிக் வூஸ்ட் உடன் முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு நடத்த உள்ளார்.

ஜெர்மனி பயணத்திற்குப் பின், முதலமைச்சர் அவர்கள் இங்கிலாந்துக்குச் சென்று, அங்கும் முதலீட்டாளர்கள் சந்திப்புகள், தமிழ் மக்களுடன் கலந்துரையாடல்கள் மற்றும் கல்வித்துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.